5 DEC 190

352
4'08



சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் ௨. | 1907௵ ஜூலை௴ | நம்பர் 10.

## 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழகம்.

(224-ம் பக்கத் தொடர்ச்சி.)

11. குண கடற்கரை நாடுகள்: தென்பாண்டி நாடு, பாண்டிநாடு, பன்றிநாடு, புனல்நாடு, அறுவாநாடு, அறுவா வடதலை நாடு என்பன. இந்நாடுகளை டாலமி முறையே கரேயாய் நாடென்றும், பெடாய் நாடென்றும், பரலியா வென்றும், அற்வார்நாய் என்றும் விவகரிக்கின்றார். கரேயாய் நாட்டில் முத்துக்குளிக்கும் கொல்காய்குடா, வியாபாரஸ்தலமான கொல்காய், ஸோலன்நதி, சேலூர் முதலானவைகளைக் கூறுகின்றார். பாண்டிநாட்டில் ஆர்கலிக்குடா, கோடிமுனை, சாலூர், தேய்லூர், தன்கலா, மொதொரா முதலானவைகளை எடுத்துச் சொல்லுகின்றார். பெடாய் நாட்டில் பிரதான பட்டினமான நிகமா சொல்லப்பட்டிருக்கிறது. பரலியாவில் (இதனைத் தொரிங்காய் அல்லது சொரிதெய் நாடென்றும் கூறுகின்றார்?) கபேராஸ் நதியும், அதன் முகத்திலுள்ள வர்த்தகஸ்தலமான கபேரிஸ்பட்டினமும், சோர்னகாஸ் இரா

ஜாங்க பட்டணமான ஓர்தௌரா என்னும் பட்டணமும் ல்லப்படுகின்றன. அற்வார்நாய் அல்லது அரௌவார் நாரிய் தைன நதியின் கரையில் மிலாங்கி என்ற ஓர் பட்டணமும் சோபட்மா என்ற ஓர் துறைமுகமும் மற்று வேறு பட்டணங்களுங் கூறப்படுகின்றன.

## 12. தென்பாண்டி பாண்டி நாட்டுப் பதிகள்:—

கோற்கை:—டாலமி கூறிய "கரேயாய்" என்பது கரையர் .இவரே பரதவர் என்னும் மறு பெயரையும் கொண்டவர். கிழ்கரையோரத்தில் வசித்தவர் ஆதலின் இவருக்குக் கரையர் என்னும் பெயர் பொருந்தியது. இப்பரதவர் குடியிருந்த நாட்டில் முக்கிய பட்டினம் கொற்கை. முன் சொன்னது போலவே இதனை டாலமி 'கொல்காய்' என்கின்றூர். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடும்போது மாங்குடி மருதனுர் மதுரைக்காஞ்சியில்,

"சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கோற்கையோர் நசைப் பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்
றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன்குறைக் கொழுவல்சிப்
புலவுவித் பொலிகூவை
யொன்றுமொழி யொலியிருப்பிற்
தென்பரதவர் போரேறே,"

67600

என்கின்றூர். அதாவது, கொற்கை வாசிகளால் விரும்பப்படுபவனும் போர்த்திற மிகுந்த பரதவரைப் படையாளராகக் கொண்டவனும் நெடுஞ்செழியன்—என்பது பொருள். இங்கே கொற்கையை வருணிக்கும் போது, முத்துக்குளிப்பார் இருக்கையினையுடைய பட்டினம் என்கின்றூர். , இப்பட்டினத்தில் கட்குடியாளராகிய இழிந்த சாதியார்களும் நிறைய வசித்தனர். குன்

முதிர்ந்து முத்த மீனும் சங்கங்கள் ஏராளமாய் நிறைந்த இத் துறையில் சங்ககழ்வோர் முத்துக் குளித்தலால் பெறப்படும் செல்வம் பாண்டியனுக்குப் பெருமையை யளித்தது. ஆதலின் இத்துறைமுக பட்டினத்தில் பாண்டியன் தனது குமாரனையுவ ராசனைவசிக்கும்படி செய்வித்தான். சிலப்பதிகாரத்தில்(நீர்ப்படைக்காதை127-ம்வரி)"கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்" என்று அவ்விதம் வசித்த ஓர் இளங்சோச்செழியன் பிரஸ்தாபம் வருகின்றது. இப்பட்டினமிருந்த இடம் இப்போது நாட்டினுள்ளடங்கி விட்டது. கடல் வரண்டு கீட்டிசை நோக்கிப் போய்விட்டது. கடல் ஒதுங்கிவிடவும் இப்பட்டினத்திற்குக் கீழ்பால் மற்றோர் துறைமுகம் ஏற்பட்டுவிட்டது. அதுவும் பிறகு உள்ளடங்கிப் போய் விட்டதென்று தோற்றுகிறது. ஏனென்றால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பிரயாணஞ்செய்த மார்க்கோ போலோ (Marco Polo) என்றவோர் மேற்றிசை நாட்டோன் 'காயல்' என்ற ஓர் துறைமுகத்தை வருணித்திருக்கின்றான். இந்தக் "காயல்" பட்டினமும், மேலே கூறிய 'கொற்கை' யும் தமிழகத்தார் 'செம்பில்' என்று பெயர் கூறிய தாம்பிரவர்ணி என்ற நதியின் கரையி லிருந்தனவாம். இந்தச் 'செம்பில்' நதியை டாலமி "ஸோலன் நதி" என்கின்றார் போலும்.

சேயலூர்: இந்நகரத்தை டாலமி 'சேலூர்' என்கின்றார். இது தென்பாண்டிநாட்டின் உள்ளிடத்திலிருந்தது. இதனைத் தமிழ்ப்புலவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். அகநானூற்றிலும் இந்நகரத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வருகின்றதாம்.

சாலியூர்: இலங்கைத் தீவிற்கும் பாண்டிநாட்டின் கரைக்கும் இடையே உள்ள சமுத்திரத்தைத் தமிழகத்தார் 'ஆர்கலி' என்று சொல்வார்கள். ஆதலின் இதனை டாலமி 'ஆர்கலிக்குடா' என்கின்றார். இந்த ஆர்கலியில், வடக்கே உள்ள முனை கோடி முனை; பாண்டியன் கரையிலுள்ள துறைமுகம் சாலியூர். இதனை டாலமி 'சாலூர்' என்கின்றார். மதுரைக்காஞ்சியில் நெடுஞ்செழியன் "சாலியூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவனே" எனப்படுகின்றான்.

"வானியைந்த இருமுன்னீர்ப்
பேஎநிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடி மிசையிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்க
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ !";

அதாவது "மேகம்படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையையுடைய அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்து கடிய காற்றுமலை வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய் விரிக்கப்பட்டு இனிய ஓசையையுடைய முரசமுழங்காநிற்ப பொன் மிகுதற்குக்காரணமாகிய சிரிய சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும்படியாக கரையைச்சேர வாணிகம்வாய்த்து வந்து இழிதலைச்செய்யும் நெடிய கொடி பாய்மரத்தின்மேலே யாடும் இயல்பினையுடைய பெரிய மரக்கலம் கருமேகஞ்சூழ்ந்த மலைபோலக் கடல் சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும் தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய தலைமை யமைந்த உயர்ந்தநெல்லின் பெயரைப்பெற்ற சாலியூரைக்கொண்ட உயர்ந்தவெற்றியையுடையவனே," என்பதுபொருள். ஆகவே சாலியூரின் பெருமை விளங்குகிறது. இத்துறைமுகத்தின் அனேக மரக்கலங்கள் அயல் நாட்டுச்சரக்குகளை இறக்குமதி செய்து பாண்டிய நாட்டாரைச் செல்வராக்குமாம். மரக்கலம் பாய் விரித்தெழுந்து கரைநோக்கி வருகின்ற விரைவில் காற்றால் அலையுண்ட திரைகள் கிழிபட கரையிலுள்ளார் ஆனந்தமிகுந்து மரக்கலம் வந்ததென்று ஆர்வமிட்டுத் தமது முரசத்தைக் கொட்டுவாராம். இவ்வி

தம் வியாபாரம் மிகுந்த இந்தத் துறைமுகம் கீட்டிசையில் ஓர் முக்கியமான பட்டினமாம். இது நெடுஞ்செழியன் துறைமுகம் என்னப்பட்டது.

**தேனூர்:**—இவ்வூர் இப்போது மதுரை ஜில்லா திருச்சுழி தாலுக்காவிலுள்ளது. இதனை டாலமி "தேப்னூர்" என்கிறார். தமிழ்ப்புலவர்கள் இதனைத் 'தேர்வண் கோமான்' என்னும் ஓர் தலைவன் உறைந்த நகரென்று கூறுகிறார்கள். ஐங்குறுநூறு மருதம் தோழிகூற்றுப்பத்தில்,

"திண்டேர்த் தென்னவ னன்னாட் டுள்ளதை
வேனி லாயினுந் தண்புன லொழுகுந்
தேனூ ரன்னவிவ டெரிவளை நெகிழ"

... ... ... ...

"கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றுந்
தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவள்"

... ... ... ....

"பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயி
னாம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன"

என்று கூறப்பட்டுள்ளன. இவ்வாக்கியங்களால் தேனூரின் நிலவளமும் நீர்வளமும் செவ்விதின் ஏற்படுகின்றது. வேனிற்காலமாக இருந்தபோதிலும் குளிர்ந்த புனல்பாய்ந்துகொண்டே இருக்குமாம். கரும்பின் யந்திரங்கள் யானையைக்காட்டிலும் அதிகமாய்ப்பிளிறும் என்று சொல்லவே இவ்வூரில் கரும்பின் வளப்பம் கூறப்பட்டது. வயல்கள்தோறும் ஆம்பல் பூத்திருக்குமென்னவே நீர்வளம் கூறப்பட்டது. இவ்விதம் செழுமை வாய்ந்த இந்நகரம் தேர்வண்கோமான் ஆணைக்குட்பட்டது. பாண்டியன் நாட்டிலுள்ளது.

**தங்கால்:**—இவ்வூரை டாலமி 'தன்கலா' என்றும் 'தென்கால்' என்றும் திரித்து வழங்கினார். இது சாத்தூர் தாலுக்காவிலுள்ள திருத்தங்கால் என்பது. ஒரு பாண்டியன் இவ்வூரின் வரும்படியையும் வயலூரின் வரும்படியையும் மதுரை மீனாக்ஷியம்மனுக்கு விட்டுவிட்டானென்று இளங்கோவடிகள் கூறியிருக்கின்றார். சிலப்பதிகாரம் கட்டுரை காதையில்,

"தடம்புனற் கழனித் தங்கா றன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கி"

என்று வரும் வரிகளைப் பார்க்க.

மதுரை:—பாண்டியன் பிரதானபட்டணமாகிய இதன் பெருமை ஏற்கனவே கூறப்பட்டது. 189-ம்பக்கம்பார்த்துக்கொள்க. இதனை டாலமி 'மொதொரா' என்கிறார்.

13. பன்றிநாடும் நாகையும்:—பாண்டிய நாட்டின் வடகிழக்கேயுள்ளது பன்றிநாடு. பன்றிநாட்டில் வசித்தவர் வேடுவர் அல்லது வேடர். டாலமி இந்நாட்டை 'பெடாய்' நாடென்கிறார். இந்நாட்டில் பன்றிகள் மிகுதிபோலும். பிரதானப்பட்டினம் நாகை அல்லது நாகபட்டினம். இதனை டாலமி 'நிகமா' என்கிறார். இப்பட்டினத்தைப் பற்றித் தமிழ் நூல்களில் ஒன்றுங்காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் கோவலன் காவிரிப்பூம் பட்டினம் விட்டுக்காவிரி யோரமாகவே மேற்றிசையை நோக்கிச்சென்று உறையூரையடைந்து அங்கு நின்றுந் தெற்கு நோக்கிச்சென்று சிறுமலை வழியாய் மதுரைக்கு போயினன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பன்றிநாட்டையும் அங்கே வசித்த வேடரையும் தமிழகத்தார் விலக்கிவைத்தாரென்றும் தமிழகத்தாருக்கும் அவ்வேடுவருக்கும் ஒரு விதத்திலும் கூட்டுறவு இல்லையென்றும் இதனால் நன்கு விளங்குகின்றது.

14. புனல்நாடும் அந்நாட்டுபதிகளும்:—புனல் நாடு என்பது நீர்வளம் மிகுந்த சோணாடு. டாலமி இதனை 'பரலியா' என்கிறார் ஒருபாகத்தை 'தொரிங்காய்' என்றும் 'சொரிதெய்' என்றும் கூறியிருக்கிறார். அதாவது 'சோழியர்' வதிந்த நாடு என்று பொருள் படும்போலும். அக்காலங்களில் காவேரி ஆற்றின் கரையில் இச்சோழியர் வசித்திருக்க வேண்டும். காவேரி ஆற்றை டாலமி 'கபேராஸ்' என்கிறார்.

உறையூர்:—அக்காலத்தில் இந்நாட்டின் பிரதான பட்டணம் உறையூர். இது சோழன் இராஜதானி. இதனை டாலமி 'சொர்னகாஸ் இராஜங்க பட்டணமான ஓர்தௌரா' என்கிறார். உறந்தை என்பதும் இதுவே. இந்நகரம் காவிரியாற்றின் தென்

கலையுள்ளது. இக்காலத்திலும் உறையூரென்ற நாமத்தையே வகித்தது. திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தே உள்ளது. நாம் கூறிவருகிற 1800 வருஷங்களுக்கு முந்திய அக்காலத்தில் இப்பட்டணம் ஓர் கோட்டையாலும் அதன் வெளியே ஓர் அகழியாலும் அதன் புறம்பே ஓர் காவன் மரக்காவாலும் சுற்றப்பட்டிருந்தது. சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில்,

"உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கி"

என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் இந்நகரத்திற்குக் கோழியூர் என்றும் பெயராம். "முற்காலத்து ஓர்கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று," என்று அடியார்க்கு நல்லார் சொல்லியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் மேற்படி காதையில்,

"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்,"

என்றுள்ளது. இந்நகரத்தில் ஓர் சார் அசோக மரத்தடிநிழலிலே திருமுக்குடைக் கீழ் வீற்றிருந்த அருகன் கோவில் ஒன்றிருந்ததாம்.

"திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
வாதியி றோற்றத் தறிவனை வணங்கி,"

என்று இளங்கோவடிகள் நாடுகாண் காதையை ஆரம்பிக்கின்றார். இந்நகரம் நீர்வளத்தில் மிகுதியாயினும், சோழராஜர்கள் மிகவும் நட்புக்கூறிப் பாதுகாத்த நகரம் காவிரிப்பூம்பட்டினமே. வர்த்தகத்திற்கும் செல்வத்திற்கும் பெயர் பெற்ற நகரம் காவிரி வாயிலே ஆதலினால் இப்பட்டினமே உறந்தையிலும் மிகவும் கொண்டாடப்பட்டது.

(இன்னும்வரும்)

பத்திராசிரியர்.

---

# பேசும் பாஷைகளை அபிவிர்த்தி செய்யும் முறை.

கடவுள் மனிதருக்குக் கொடுத்தருளி யிருக்கும் வரங்களிலெல்லாம் முதன்மையுள்ளது அறிவு; அதற்கு அடுத்தபடியானவரம் பேச்சு; இந்தப்பேசும் திறமையினால் நமது உள்ளக்கருத்தை வெளியிட்டு அந்தக்கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்துவது சாத்தியமாகிறது. தேன்கூட்டை அமைத்துக்கொள்ளும் திறமை தேனீக்கு இயற்கையாய் அமைந்திருப்பதுபோல பாஷையை உண்டுபண்ணிக்கொள்ளும் சக்தி மனிதன் உள்ளத்திற்கு இயற்கையாய் அமைந்துள்ளது.

இத்தாலியா நாட்டிற் பிறந்து இத்தாலியா நாட்டுப் பழக்கங்களுக்கு இடையே இருந்து வளர்ந்த ஒரு சிறுவனை பெஸ்ச்சியஸ் தமிழர்களோடு கூடிப்பழகினதினால் கீர்த்தி வாய்ந்த தமிழ்ப் புலவனாகப் பேரெடுத்து, நிஷ்பட்சபாதமாக நூல்களின் குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து தெரிந்து எடுத்துக்காட்டுதலைத்தொழிலாக உடையகல்விமான்கள் மெய்ச்சிக்கொள்ளும்படியான செய்யுள்களை இயற்ற வல்லவனானான். அந்த இலக்கிய ஆராய்ச்சிக்காரர் இந்த பெஸ்ச்சியின் கவிகளை தாயுமானஸ்வாமிகளின் முதற்றரமானசெய்யுள்களுக்கு இணையானவைகளென்று புகழ்ந்து பேசுகிறார்கள். இவ்வாறே, இந்துகளுக்கு நடுவேயே பிறந்து வளர்ந்த இராமேசசந்திரதத்தன் என்னும் பெங்காளிச் சிறுவர் அங்கிலேயரோடு கூடிப்பழகுவதினால் இங்கிலீஷ்பாஷையில் "பூர்வீக இந்தியா" சரித்திர நூலையும், "பூர்வீக இந்தியக் கவிகள்" என்கிற பாடல்களையும் இயற்ற வல்லவராய் விட்டார். இந்த நூல்கள் சிலாக்கியமான இங்கிலீஷ் நூலாசிரியர்களால் இயற்றப்பட்ட இதேமாதிரியான பிரபந்தங்களுக்கு நடையிலாவது வாசக தாடியிலாவது வேறு எவ்விதத்திலாவது தாழ்ந்தவைகள் அல்ல. எந்த பாஷையையும் ஒவ்வொரு பாஷையையும்தெரிந்து கொள்ளும் திறமை மனிதரோடு கூடப்பிறந்தது என்பதை ருஜுப்படுத்துவதற்கு இந்த இரண்டு உதாரணங்கள் போதும்.

2. பாஷைகளின் உற்பத்தி பின்வருமாறு:—சில கருத்துகளை வெளியில் விடுவதற்க்க வெகு பூர்வீகமான காலத்தில் பலமனிதர்களின் சம்மதத்தின்பேரில் பல அடையாளங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டு தொன்றுதொட்டு கர்ண பரம்பரையாக வழங்கி வந்தன. இந்த அறிகுறி அடையாளங்கள் காலக்கிரமத்தில் ரூபபேதங்களை அடைந்து பொருள் மாறுபாடுகளையும் பெற்றன. ஒரேசொல்ரூபத்திற்குப் பலவிதப் பொருள்களும் ஏற்பட்டன. சொற்களைச் சுருக்குவதினாலும் வேறுமொழிகளைத் தன்னுருவமாக்கி ஸ்வீகரித்துக் கொள்வதினாலும், வெவ்வேறு சொற்களை ஒன்றுசேர்த்து இணைப்பதினாலும் ஒரே சொல்லுக்கு பலபொருள்கள் ஏற்படுவதினாலும், அன்னியபாஷை சொற்கள் உட்புகுவதினாலும், உலகின் பல பாஷைகள் உற்பத்தியாயின. இவைகளுக்குள்ளே, எது நமது முன்னோர்களுக்குள்ளே உற்பத்தியாகி வளர்ந்து அவர்கள் எண்ணங்கள், உணர்ச்சிகள் அநுபோகங்கள் இவைகளை தனக்குள் தாக்கல் செய்து வைத்துக்கொண்டிருக்கிறதோ, எதை நாம் தொட்டிலிலிருந்த காலமுதல் கேட்டு வழக்கப்பட்டிருக்கிறோமே, எதில் நமது கருத்துகளை தங்குதடையின்றி தயாராய் வெளியிடக்கூடியதாக இருக்கிறதோ, அது தான் நமது பேசும்பஷையாகிய பிராகிருதமொழி; இந்த மொழியை அபிவிருத்தி செய்யும் முறைகளை எடுத்துக்கூறுவது தான் இந்த வியாசத்தின் இலட்சியம்.

3 பாஷையை நாம் அபிவிருத்திசெய்து மேன்மேலும் வளரும்படி செய்தலுக்கு அதுஎற்றதா? உள்ளத்திலுள்ளகருத்தை வெளியிடுவதற்குமனிதன் கையிலுள்ள கருவியாகமட்டும்இருப்பது பாஷை. மனிதன் மொழிகளின் பொருளைத் திருத்தமாக வரையறுக்கவும் அவைகளுக்குள் இருக்கும் தாரதம்மியங்களைக் கண்டுகொள்ளவும் உள்ளத்தின் அடிவானத்தில் புதுக்கருத்துகள் தோன்றவும் ஆரம்பிக்கும்போது பாஷை வளர்ந்து முன்னுக்கு வரும். ஜனங்களுக்குள்ளே அறிவாகிய ஒளி பரவப்பரவ நவம் நவமான பல்விதக் கருத்துகள் அவர்கள் மனங்களில் தோன்றுகின்றன; இக்கருத்துகளை ஒன்று சேர்த்து அமைத்துச் சொல் ரூபமாக வெளியிட வேண்டியிருக்கிறது. இக்கருத்துகளை

ப்பழய்மொழிகளைக் கொண்டாவது, பழய மொழிகளின் திரிபுகளைக்கொண்டாவது அந்நிய பாஷைகளிலிருந்து கடன் வாங்கப்பட்ட மொழிகளைக் கொண்டாவது வெளியிட வேண்டியிருக்கிறது. இரண்டு தனிப்போர்வழிகள் ஒருவரை யொருவர் சந்திப்பதினால் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் நேரிடுவது போல், ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரொடு கூடிப்பழகும்படி நேரிடும்போது அவர்கள் பாஷைகளின் மொழிகளும் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளப்படுகின்றன. ஆராபியர் அந்நிய நாட்டாரோடு கூடிப்பழக ஆரம்பித்த பிறகு வியாபாரத்திற்குரிய மொழிகளை மாத்திரம் ஏற்றுக்கொண்டார்கள். ஆரியஜாதியில் சேராதவரான தமிழ் நாட்டார் ஆரியரோடு பழகி அவர்களிடமிருந்து தத்துவ ஞானத்தையும் மனிஷ்ய சங்கக்கூட்டுறவிற்குரிய தந்திரங்களையும் கற்றுக்கொண்டபோது இலக்கிய அபிவிருத்தியின் பொருட்டு வெள்ளம் வெள்ளமாக வடமொழிப்பதங்களைத் தங்கள் பாஷையோடு சேர்த்துக் கொண்டார்கள். இதே மாதிரி ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரைஜயிக்கும்படி நேரிடும்போது ஜயிக்கப்பட்டோர் வெற்றி பெற்றவர்களுக்கு மாணுக்கர்களாகிறார்கள்; அவ்விதம் வெற்றி பெறுவோர் தங்களுக்குக் கீழ்ப்பட்டுப் போனவர்களின் சொத்துசுதந்திரங்களைத் தங்கள் இஷ்டப்படி நடத்த ஏதேச்சையான அதிகாரம் உள்ளவர்களாவது போல, வெல்லப்பட்டவர் பாஷைகளையும் தங்களுக்கு இஷ்டமானபடி நடத்த வல்லமை பெற்று விடுகிறார்கள். இங்ஙனம் உரோம ஜாதியார்கள் மேல் ஐரோப்பிய பாஷைகளைத் தங்கள் இஷ்டப்படி அடக்கியாளத் திறமை யேற்றபோது பூர்வீக மொழிகளும் உரோமர் பாஷையாகிய லாற்றீனும் சேர்ந்து ரோமான்ஸு பாஷைகள் என்னும் நவீனபாஷைகள் உற்பத்தியாயின இவ்வாறுஒருமொழியிலிருந்து மற்றொருமொழிக்கு வார்த்தைகள் கிடைக்கும் முறைகளுக்குத் தக்க உதாரணம் கொடுப்பதற்கு இங்கிலீஷ் பாஷையை எடுத்துக்கொண்டாலே போதும். அதன் அளவிறந்ததான சொற் செல்வத்தில் நாலத்தொன்று மாத்திரம் சுயச்சரக்கான ஆங்கிலோ ஸாக்ஸன் பாஷையைச் சேர்ந்தது. மிச்சப்பட்ட முக்கால் பாகத்து மொழிகளும் பலபல சந்தர்ப்பங்

களை முன்னிட்டு லாற்றின் பாஷையிலிருந்தும் கிரேக்கி லிருந்தும், அரபிபாஷையிலிருந்தும் இங்கிலீஷ்காரர் வர்த்தகமும் தத்துவ ஆராய்ச்சியும் எம்மட்டிற்கு எட்டியதோ அவ்வளவுநெடுந்தூரத்திலுள்ள மொழிகளிலிருந்தும் சம்பாதிக்கப்பட்டன. ஒரு பாஷையைப் பேசும் ஜனங்களுக்கு புத்தி விஸ்தாரம் அதிகரிக்க அதிகரிக்க, அவர்களுடைய பாஷையும் விஸ்தரித்து வளர்ச்சியை அடைகின்றதென்பதற்கு இங்கிலீஷ் பாஷையையும் தமிழையும் விட்டு அப்பால் போய் விசாரிக்க வேண்டியதில்லை.

4 ஒரு பாஷை எவ்வளவு எளியதாக இருந்தாலும், அதற்கு உரியவர்களின் சரியான முயற்சியால் மேன்மேலும் விர்த்தியடைந்து சிறப்புப்பெற முடியாததாய் அவ்வளவு கவைக்குதவாத மொழி உலகத்திலில்லை. ஒரு பாஷை அர்த்த புஷ்டியற்று இளைத்திருந்தால், அதைப்பேசுகிறவர்களுக்கு கருத்துவளம் இல்லாத குறையே அதற்குக் காரணமாகும். ஒரு பாஷையைப் பேசுகிறவர்கள் தங்கள் மொழிகளை பிரயோகிக்கிற முறைகளுக்குத்தகுந்தபடி, அதன் விஸ்தாரமும் வல்லமையும் உயர்வுதாழ்வை அடையும். திறமையற்ற கைகளிலிருக்கும் முதற்றரமான ஆயுதங்களைவிட சாமர்த்தியசாலிகள் கைகளிலிருக்கும் எளிய ஆயுதங்கள் அதிக மேன்மையான வேலையைச் செய்து முடிக்கலாம். பூர்வீக எகிப்தியர்களுக்கு நீராவியந்திரமாவது எஃகாவது இன்னது என்று தெரியாது; அப்படி யிருந்தும், அவர்கள் மகா பெரியவைகளும் அழகும் சிறப்பும் வாய்ந்தவைகளுமான கட்டிடம் முதலிய அரிய வேலைகளைச்செய்ய வல்லவராக இருந்தார்கள்; இக்காலத்து யந்திர சாஸ்திர நிபுணர்களுக்கு எத்தனையோ செளகரியங்கள் இருந்தும் எகிப்தியர்கள் புல்லிய சாதனங்களைக்கொண்டு செய்து முடித்த வேலைப்பாடான சிற்பம் முதலியவைகளைக் கண்டு "ஓ! இவ்வளவு சிறந்த வேலை நம்மால் இயலாது", என்று ஏக்கங்கொண்டு புறங்கொடுக்க வேண்டியிருக்கிறது. "வல்லவனுக்குப் புல் ஆயுதம்". பாஷைகளின் வளர்ச்சியில்ஒரு பாஷைக்கும் மற்றொரு பாஷைக்கும் உள்ள தாரதம்மியம் என்ன காரணத்தினால் என்றால், சிலர்கள் கல்விப்பயிற்சியாலும் புத்தி தீக்ஷண்யத்

தாலும் மேன்மை பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் இவ்விஷயங்களில் குறைபாடுள்ளவர்கள்; இதுவே வித்தியாசத்திற்குக் காரணம். மனிதனுக்கு பாஷை கற்றுக்கொள்ளும் திறமை இருக்கிறது. அவன் அதைப் பயிற்சியால் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

5. இவ்வாறு பாஷை விஷயத்தில் பயிற்சி பெறுவது நாமும் ஒரு நாட்டார் தான் என்று முன்னுக்கு வருவதற்கு அத்தியாவசியம். அந்நிய பாஷையின் மூலமாகக் கல்விப்பயிற்சிபெற்று புதிய கருத்துகளை உட்கொண்டவர்கள் செய்யவேண்டிய கடமை ஒன்று உண்டு; அதாவது அவர்கள் தாங்கள் பெற்ற அறிவைத் தங்கள் தாய் பாஷையில் மொழிபெயர்த்துத் தன் நாட்டிற்கு உரியதாகச் செய்யவேண்டியதுதான். இப்படிச் செய்தால் பேசும் பாஷைக்கு வலு அதிகப்படுகிறது என்று தெரிய வரும். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் ஜர்மனி தேசத்தில் ஞானசூரியர்களாக மதிக்கத்தக்க கெப்ளர், லெயிப்நிட்ஸ் முதலிய மகாபுத்திமான்கள் அவதரித்திருந்தார்கள் என்றாலும் அவர்களுடைய பாஷையாகிய ஜர்மன் நாளுக்குநாள் ஏழமையடைந்துகொண்டே வந்தது; அக்காலத்தவர், பிரபந்தங்களை லாற்றின் பாஷையில் எழுதுவது வழக்கமாகையாலும், பேசும் பாஷைகளைச் சட்டை செய்வாரில்லாத படியாலும் சுயபாஷா அபிவிருத்தி என்பதே இல்லாதிருந்தது. அடுத்த நூற்றாண்டில் பிரபலம் பெற்ற சிலநூல்கள் வெளிப்பட்டு ஜர்மன் பாஷையில் உள்ளீடாக அமைந்திருந்த பொருட்செல்வத்தையும் சொற்செல்வத்தையும் பலரும் கவனிக்கும்படி வெளிப்பட்டன. உணர்வோடு அதை ஆதரிப்பாரில்லாமையால் ஜர்மானியரின் சுயபாஷையினது திறமை வளம் முதலியனவெல்லாம் வெளிப்படாது மறைந்து கிடந்தன; ஜர்மன் பாஷை இப்படி உயிர்த்தெழுந்தது முதல், எவ்வித அறிவை வெளியிடுவதற்கும் ஏற்றமொழியென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது; அறிவு புகட்டுவதில் வேறு எந்த மொழிக்கும் அது இப்போது தாழ்வானதல்ல.

6. இங்கிலீஷை ஆராய்வதினால் அறிவு சம்பாதித்தவர்கள் இங்கிலீஷிலேயே பேசுகிறதென்றும் எழுதுகிறதென்றும் வைத்

துக்கொண்டால், பேசும் பாஷை ஆரோக்கியமற்று இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும்படி நேரிடும். இதற்கு ஐயமில்லை. இவ்வாறில்லாமல் தாங்கள் உட்கொண்ட புதுக்கருத்துகளைப்பேசும் பாஷைகளுக்கு உரியவைகளாகச் செய்வார்களானால், தங்கள் நாட்டு அசேஷ மகாஜனங்களுக்கு ஞானசம்பத்தை தருவதற்கு இதுநிச்சயமான வழியாகும். திருவாங்கூர் ராஜ்யத்தில் வருஷத்தில் மொத்த ஜனத்தொகையில் நூற்றில் ஒரு பாகத்தவருக்கு மட்டுமே இங்கிலீஷ் கல்விப்பயிற்சி கிடைக்கிறது. இந்த சொற்பத்தொகையிலும், நவீன சாஸ்திரத்தின் பல துறைகளுக்கு ஜனங்கள் கண்ணைத் திறந்து வைக்கக்கூடியவைகளான கலாசாலைப்படிப்பு அல்லது உயர்தர வித்தியாசாலைப் படிப்பைப்பெறுகிறவர்கள் பாதிப்பேர்தான்; மற்றவர்கள் இங்கிலீஷ் ஞானம் அதிகப்பயனைக்கொடுக்க முடியாத பிரதம பாடசாலைப்படிப்போடுமட்டும்நின்றுவிடுகிறார்கள். நூற்றுக்கு அரைப்பாகத்தவரான மேற்கூறிய கல்விப்பயிற்சி பெற்றோர் நீங்கலாக நாட்டிற் பெரும்பான்மையோருக்கு அறிவு கிடைப்பதற்கு வழி பேசும் பாஷையைத்தவிர வேறு கெதி இல்லை. பேசும் பாஷையின் மூலமாக நவீன அறிவைப்பெறும் மார்க்கம் நம்மவருக்குத் திறந்துவைக்கப்படாவிட்டால், நமது நாடு அபிவிருத்திபெற்று முன்னுக்கு வருவது கடினமாகி விடும்.

7. பேசும் பாஷைகளை விருத்திசெய்வது சாத்தியமென்றும், அவ்வித வளர்ச்சி நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற கரு[illegible]றும், பொதுவாகச்சில அபிப்பிராயங்களை வரைந்தோ[illegible] களை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த சில மார்க்கங்களை [illegible]கு குறித்துக்காட்டுவோம். எல்லாவற்றிலும் முதன்மையானதும், முக்கியமானதுமாகிய மார்க்கம், நமது குழந்தைகளின் பிரதம சிட்சையை தாய் பாஷையிலேயே நடத்தவேண்டுமென்பது. தாயின் கையைவிட்டு அப்புறப்பட்ட உடனே சில குழந்தைகளுக்கு சுதேச பாஷைப் பழக்கம் என்பதே இல்லாமற் போய்விடுகிறது; அந்த மாதிரி நடக்கும்படி நாம் இடம் கொடுக்கக்கூடாது. பதினொன்று அல்லது பன்னிரண்டு வயது ஆகிற வரையில் நமது நாட்டிற்குரிய பாடல்களிலும் கர்ணபரம்பரை

யாக வழங்கிவரும் கதைகளிலும் நமது நாட்டுச் சரித்திரத்தின் முக்கியமான வர்த்தமானங்களிலும் பழக்கம் இருந்து கொண்டே வரவேண்டும். இந்தக்காலத்திற்கு பிறகு அந்நிய பாஷை போதிக்கப்படும் நேரம்போக மிகுந்த பொழுதில் நாட்டிற்குரிய பாடல்கள் கதைகள் முதலியவைகளைச் சொல்லி வைக்கலாமென்று காலஹரணம் செய்யக்கூடாது.

இரண்டாவது:-இங்கிலீஷ் கல்விகற்பதிலேயேமுக்கியமுயற்சி செலுத்தப்படுகிற பிற்காலத்திலும் பேசும் பாஷைகளில் நடக்கிற பிரசங்கங்களையும் படனங்களையும் உற்றுக்கேட்கிற வழக்கம் இருந்துகொண்டிருக்கவேண்டும். வீட்டில் ஒருவரோடொருவர் கூடிப்பழகும்போது தாய்மொழியை இங்கிலீஷ் அமுக்கிவிடும்படி இடங்கொடுத்தல்ஆகாது.

3-வது:—இங்கிலீஷ் கல்விப்பயிற்சி பூர்த்திபெற்றபிறகும் இலக்கிய ஆராய்ச்சியில் ஆசையுள்ளமலையாளிமாணுக்கர்கள், தமிழிலும் வடமொழியிலும் பயிற்சிபெறமுயலுதல்கடமை. தமிழ்மலையாளபாஷைக்கு உயிர் கொடுத்ததாய். இக்காலத்திற்கு அவசியமானவைகளாய்த்தோன்றும் புதுக்கருத்துகள் வெளியிடுவதற்கு தமிழ்வித்துவான்களும் மலையாளவித்துவான்களும் மிகுதியாகச்சொற்களை இரவல் வாங்கிக்கொள்வதற்கு ஏற்ற சமீபஇல்லமும் கொட்டியமுமாக ஒப்புக்கொள்ளப்படுவது வடமொழி.

4-வது:—இவ்வாறு பயிற்சிபெற்றபிறகு ஒவ்வொருதினமும் [illegible]ள் சுயபாஷையில் வியாசம் முதலிய எழுதும் பழக்கம் [illegible]துகொண்டிருக்கவேண்டும். அவைகளாவன. (1) மொழிபெயர்ப்பு (2) தானே சுயமாக வியாசமெழுதுதல். இவ்வித இருமுயற்சிக்கும் முக்கிய இலக்குயாதெனில், புதியனவாகிய அறிவையும் கருத்துகளையும் நாட்டுப்பாஷைக்கு உரியனவாக்குவதுதான்.

8. மொழி பெயர்ப்பைப்பற்றிப்பேசுகையில், ராஜஸ்ரீ கேரளவர்மாவலியகோயில் தம்பிரான் அவர்கள் மலையாள இலக்கியத்திற்குச்செய்திருக்கும் மகோபகாரத்தைப்பற்றிப்பேச இந்தசமயத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறேன். அக்கனவான் தன் ச

யபாஷைக்குச்செய்திருக்கும் பேருதவிக்கு ஞாபகசின்னமாக மலையாளநாட்டு ஜனங்கள் ஒன்றுபட்டு ஒரு நிதிசேர்ப்பித்து அதிலிருந்து சென்னை ஸர்வகலாசாலைப்பரிட்சைகளில் மேலாகத்தேறுகிறமாணுக்கனுக்குப்பரிசளிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். நவீனதத்துவசாஸ்திரங்களை உபதேசிக்கிறபிரதம புஸ்தகங்களின் மொழிபெயர்ப்பு நாம் கவனிக்கவேண்டிய அம்சங்களில் முக்கியமான ஒன்று. இவ்விதநூல்களில் ஒன்றுதான் இதுவரையில் மலையாளபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அது யாதெனில் மகா-ா-ஸ்ரீ கிருஷ்ணபண்டாலை B. A. B. L. அவர்களால் இயற்றப்பட்ட இரசாயனசாஸ்திரபாலபோதமே

இந்த சம்மந்தத்தில், தத்துவ சாஸ்திரநூல்களை மொழிபெயர்க்கும்போது, சாஸ்திரப்பொருள்களுக்கு இடப்பட்டிருக்கும் நாமதேயங்களைத்தர்ஜிமாசெய்வதில் பொருளை நன்கு விளக்காது மறைக்கத்தக்க விநோதக்கோரணியான பெயர்களை வடமொழியில் அமைத்துக்கொள்வதைவிட, தற்காலத்தில் ஐரோப்பியபாஷைகளில் வழங்கும் சாஸ்திரபரிபாஷைகளை அப்படியேசுவீகரித்துக்கொள்வது நலம்.

பாஸில்லி (சிற்றுயிர்) ப்ரோட்டஸோவா * * * முதலிய ஜீவசாஸ்திரபரிபாஷைமொழிகள் லாற்றீன்பாஷையிலிருந்து இங்கிலீஷில் தத்பவமாக ஸ்வீகரித்துக்கொள்ளப்பட்டன என்றால், நமது பேசும் பாஷைகளிலும் அம்மொழிகளைப்பிறந்த மேனிக்கு ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? தத்துவசாஸ்திரப்பொருள் உலகமெங்கும் ஒரேதன்மையுள்ளதாக இருப்பதுபோல் சாஸ்திரபரிபாஷைகளும் உலகத்திற்கெல்லாம் பொதுவாயிருத்தல் நல்லது.

9. வேறு பாஷைகளிலிருந்து நூல்களை மொழி பெயர்ப்பதுமன்னியில், சிலவற்றை நமது நாட்டுக்கும் நிலைமைக்கும் தக்கவாறு மாற்றி சௌகரியப்படி பொருந்துமாறு அமைத்துக்கொள்ளலாம். இவ்வாறு ஸ்வீகரித்துக்கொள்ளப்படும் நூல்கள் முதல் நூலின் முக்கியக்கருத்துகளை உள்ளபடி கிரகித்துக்

கொள்ளுகையில் சொற்றொடர்களையும் நடையழகையும் இசைந்தபடி தாராளமாக ஏற்கக்கூடியவைகளாக இருக்கின்றன.

10. இப்போது சுயமாக ஆராய்ச்சிகள் செய்து நூல்கள் எழுதுவதைப்பற்றிப்பேசுவோம். இங்கிலீஷ் படிக்காத நமது சுதேச வித்துவான்கள், நாட்டில் வழங்கும் பாடல்களையும், கர்ணபரம்பரையாகச்சொல்லிக்கொள்ளப்படும் கதைகாரணங்களையும் சேர்த்து அமைத்து புஸ்தகங்கள் இயற்றுவதோடு, நமது இலக்கிய இலக்கணவரலாற்றைப்பற்றியும் விசாரித்து அறிந்து, கிடைத்த சங்கதிகளைப்புத்தகங்களாக அமைத்துக்கொள்ளலாம்.

11. பெரும்பாலும் சுயமாக வியாசங்கள் எழுதுவதில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் சில உள: அவைகளாவன: நாட்டிற்குரிய சொற்களைக்கொண்டு அல்லது மரபுகளைக்கொண்டு வெளியிடக்கூடிய கருத்துக்களை அவசியமில்லாது அந்நிய பாஷை மொழிகள் அல்லது மரபுக்களைக்கொண்டு வெளிப்படுத்துதல் ஒருபோதும் சரியல்ல. திருவள்ளுவநாயனாரின் குறளில் போதிக்கப்படும் நீதிகள் வடமொழி ஞானசாஸ்திரங்களையும் வடமொழி நீதிசாஸ்திரங்களையும் ஆதாரமாக உடையவையென்றாலும் அக்குறளின் 1330 பாடல்களிலும் பிரயோகிக்கப்படும் வடமொழிப்பதங்களெல்லாம் சேர்ந்தாலும் அவைகளை நமது விரல்களால் எண்ணிவிடக்கூடியவைகளாய் அவ்வளவுமட்டாயிருக்கின்றன. அதே மாதிரி இங்கிலீஷ் மகா கவியாகிய ஷேக்ஸ்பியர் பிரபந்தங்களில் லாற்றீன் மொழிகள் மிகவும் சொற்பம்; ஆகவே இந்த இரண்டு மகான்களும் தங்கள் சுயபாஷையை சொல்வன்மையோடும் பலிப்பாகவும் பிரயோகிக்கிறார்கள்.

சுயத்தில் வியாசம் எழுதுகிற விஷயத்திலும், மொழிபெயர்ப்புகள் செய்வதிலும், கவனிக்கவேண்டிய சங்கதி மற்றொன்று உண்டு. மரபுச்சொற்களையும் சொற்றொடர்களையும்பிரயோகிக்கிற விஷயத்தில், கண்டிப்பாக பாஷையின் விதிகளுக்கு இணங்கி நடத்தல் கடமை. பிரகிருதியின் சட்டங்களை யார் நன்றாக ஆராய்ந்தறிந்து அவைகளுக்கு இணங்கி நடக்கிறானோ அவனே

பிரகிர்தியை மிகவும் நன்றாக அடக்கியாளத்திறமையுள்ளவனாக இருக்கிறான். அதுபோல, அந்நிய பாஷைக்கருத்துக்களை மொழிபெயர்த்துத்தன் நாட்டிற்கு உரியதாகச்செய்து அதைச்செல்வப்பெருக்குள்ளதாகச்செய்யும்போது, தன் பாஷைக்குரிய அவசியமான நடை மரபு, இலக்கண ஒழுங்கு இவைகளுக்கு விருத்தமில்லாமல் எவன் எழுதுகிறானோ அந்த கிரந்த கர்த்தாவே தான் தொட்ட காரியத்தில மிகவும் நன்றாக வெற்றியடைகிறான். அப்படிச்செய்வதிலும் அவசியமான விதிகளுக்குக்கட்டுப்பட்டு நடந்தாற்போதும்; மற்ற விதிகளை கவனிக்கவேண்டியதில்லை. பத்தியகத்யங்களின் ரூப விஷயத்திலோ என்றால் அவ்வளவு கண்டிப்பாக இருக்கவேண்டியதில்லை. பாஷையின் இயல்புக்கு இடைஞ்சலில்லாமல், படிப்போர் மனதிற்கு நல்ல பயிற்சியைத் தரக்கூடியதாக எந்தெந்த பத்தியகத்திய ரூபங்களை உபயோகிக்க வேண்டுமென்றாலும் அப்படியே செய்யலாம்; அதனால் பாதகமில்லை. இங்கிலீஷ் பாஷை பல அம்சங்களில் விருத்தியடைந்து பலவிதக் கருத்துகளையும் உணர்வாகக் கிரகிக்கிற சக்தியுள்ளதாக இருப்பதற்குக்காரணம் யாதெனில், ச்சாஸர் முதலிய ஆதிகாலத்து இங்கிலீஷ் கிரந்தகர்த்தாக்கள் விஸ்தாரபுத்தியுள்ளவர்களாக இருந்ததும் நல்லதை எங்கிருந்தாலும் கிரகிக்கலாம் என்று கருதி நடந்ததும் தான். பேசும் பாஷைகளின் அபிவிருத்திக்குப்பெருத்த இடைஞ்சலாக முன்னிட்டு நிற்பதுயாதெனில், நாட்டின் பழய ஏற்பாட்டின்படி தயாரான வித்துவான்கள் இக்காலத்திற்கு உரிய மாறுபாடுகளை ஏற்றுக்கொள்ள மனமில்லாதிருப்பதுதான். பகுத்தறிவிற்கும் சௌகரியத்திற்கும் இணங்கி, பழய காலத்து ஒழுங்குகளுக்கும் முறைகளுக்கும் மாறுகச்சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தால், ஏன் அவ்வாறு செய்யக் கூடாது? "எப்பொருளெச்சொலினெவ்வாறுயர்ந்தோர், செப்பினரப்படிச்செப்புதன்மரபே" என்றுநன்னூல் என்னும்தமிழ் இலக்கணம் சொல்லுகின்றது. (அதன் பொருள்: எந்த எந்தக்கருத்துகளை எந்த எந்த மாதிரி வார்த்தைகளால் பெரியோர்கள் எடுத்துப்பேசினார்களோ அப்படிச்சொல்லுவதே ஒழுங்கான நடை) இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான ஒழுங்குகளைக் கண்மூடித்தன

மாய் யுக்தாயுக்தம் பார்க்காமல் அநுஷ்டித்து வந்ததினால், பிரபந்தங்களின் ரூபத்திலாவது, செய்யுள்களின் பொருள்களிலாவது, தகுந்த வார்த்தைகள் பொறுக்குவதிலாவது அபிவிருத்தி செய்ய இடமில்லாமல் தடை ஏற்பட்டு விட்டது. இவ்விதப்பிடிவாதமான பூர்வாநுஷ்டானப்பித்தினால்தான் நமது நாட்டார் நல்ல வீடுகள் கட்டிக்கொள்ளாமலும், உடம்பை நன்றாகப்போஷிக்கத்தக்க உணவுகளைச் சாப்பிடாமலும், கௌரவமான புது ஒழுங்கிற்கேற்க உடைதரித்துக்கொள்ளாமலும் நாளது வரையில் கஷ்ட ஜீவனம் செய்துகொண்டிருக்கிறார்கள். மேற்கூறிய நிர்ப்பந்தங்கள் மூடட்டாள்தனமானவைகளென்று நமக்குத்தெரிந்திருக்கும் இக்காலத்திற்கூட மலையாள நாடகங்கள் ஆதிமுதல் அந்தம் வரையில் என் சம்பாஷணை என்பதே இல்லாமல் பாட்டுமயமாகவே இருக்கவேண்டும்? ஒரு நாடகத்தைப்பார்ப்போர் அல்லது வாசிப்போர் அதனால் புத்திப்பயிற்சியடைய வேண்டுமானால் மனதிற்குள்ளிருக்கும் உணர்ச்சிகள் எண்ணங்கள் முதலியன நன்கு விளங்கும்படி நடிப்பதற்குச்சௌகரியமாகச்சம்பாஷணை ரூபமாக அமைந்திருத்தல் வேண்டும்; அப்படியின்றிப்பாட்டுமயமாக இருந்தால் சாத்தியமான அளவுக்கு இன்பந்தராது. சுவதேச பாஷைகளில் பிராஸமில்லாமல் செய்யுள்கள் எழுதுவது பாபமென்று ஒரு காலத்தில் எண்ணப்பட்டது. பங்காள தேசத்து வரகவியாகச்சிறப்புற்று அவதரித்த மதுசூதனதத்தர் பிராஸமில்லாத கவிகள் உள்ள ஒரு நூலை எழுதினார். மிக்க நல்ல மகானாகிய வித்தியாசாகரர்கூட அந்தப்பிரயத்தனம் ஜயமில்லாதது என்று சொல்லிவிட்டார். ஆனால் மதுசூதனதத்தர் ஊக்கந்தளராது முயற்சி செய்தார்; பிராஸமில்லாத செய்யுள்களாலாக்கப்பட்ட இரண்டாவது நூலொன்றையும் பிரசுரித்தார்; ஒரேமாதிரி சப்தங்கள் சேர்ந்து சேர்ந்து ஒலித்து மணியோசைபோல சப்திப்பதைக்காட்டிலும் நடையின் நயமும் நாகரீகமும் காம்பீர்யமுமே மேலாக மதிக்கத்தக்கவை யென்று பங்காளி நூல்களை வாசிக்கும் மகாஜனங்கள் அறிந்துகொண்டார்கள்; மில்டன் "பூங்காவனப்பிரளயம்" (பாரடைஸ்லாஸ்ட்) என்னும் நூலை எழுதியது முதல் பிராஸமில்லாத செய்யுட்கள் இங்கிலீஷ் பாஷைக்

கு ஏற்றவைகளாய் விட்டதுபோல், மதுசூதனதத்தர் காலம் முதல் பிராஸமில்லாத கவிகள் பங்காளி பாஷைக்கும் ஏற்றவைகளாய் அமைந்துவிட்டன. சுதேச இலக்கியங்களிலுள்ள இன்னும் ஒரு குறையுமுண்டு. இதை ஐரோப்பியர்கள் மிகுதியாக எடுத்துக்காட்டிக்குற்றங்கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு குறை கூறுவதற்கு நாம் இடம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அது யாதெனில் அர்த்த புஷ்டியால் வரும் வலிமையை விட பாஷையின் நயத்தை மேலாக மதிக்கிறோம்; சொல்லப்படும் சங்கதி உண்மையா என்பதை கவனிக்காமல் காதுக்கு இனிமையானதா என்பதை கவனிக்கிறோம்; நமது நூல்கள் வலிமைக்குறைவும் காரிய லெட்சயக் குறைவும் உள்ளனவாக இருக்கின்றன; நூலாசிரியர்கள் அர்த்தத்தைக் கவனிக்க வேண்டியிருக்க சப்தத்தையே முக்கியமாக கவனித்துக்கொண்டு போகிறார்கள். தமிழிலும் மலையாளத்திலும் எழுதிய மிகவும் சிறந்த நூல்களிற்கூட இந்தக் குறை இருந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாக்கண்டத்து நவீன இலக்கியங்களின் வன்மையாலும் உத்ஸாகத்தாலும் இக்குறைகள் நிவர்த்தியாக வேண்டும்.

12. மேலே சொன்ன முறைகளை அநுஸரித்து இங்கிலீஷ் படித்த சுதேசிகள் செய்த முயற்சியால் வங்காளி பாஷையும் மகாராஷ்டிர பாஷையும் சொற்பகாலத்துக்குள்ளாக மிக்க பொருட்செல்வமுள்ளவைகளாகச் செய்துவிடப்பட்டன. தெலுங்கு பாஷைக்கும் இவ்வாறு புது வருவாய் உண்டாயிருப்பதோடு மகா-ள-ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு என்னும் ஒருவருடையமுயற்சியால் புதிய வலிய நேர்த்தியானநடைநயமும் ஏற்பட்டிருக்கிறது.

நவீன முறைப்படி இயற்றப்பட்ட "மனோன்மணீயம்" என்னும் தமிழ்நாடகத்தைச்செய்த மகா-ள-ஸ்ரீ சுந்தரம்பிள்ளையவர்கள் நமது திருவநந்தபுரம் கலாசாலையின் மாணாக்கரென்றும் அதின்போதகாசிரியரில் ஒருவரென்றும்பாத்தியங்கொண்டாடுவதில் நாம்மெத்த மகிழ்ச்சியடையலானோம். கற்பனைக்கதைகளுக்குள், மகா-ள-ஸ்ரீ C.V. இராமன் பிள்ளையவர்கள் இயற்றிய "மார்த்தாண்டவர்மா" என்கிற நூலை மகா-ள-ஸ்ரீ சந்துமேனோன் அவர்க

ளால் இயற்றப்பட்ட இந்துலேகா என்னும் புத்தகத்திற்கு மட்டும் அடுத்தபடியாக வைக்கலாம். மகா-ா-ஸ்ரீ K. R. கிருஷ்ண பிள்ளையவர்கள் கோல்ட்ஸ்மித் (Goldsmith) என்பவரால் இயற்றப்பட்ட "அவள் வெற்றிபெறுவதற்காக வணங்கிநடக்கிறாள்" (She Stoops to Conquer) என்கிற நாடகத்தை மலையாள பாஷையில் அழகாகஸ்வீகரித்து எழுதி இருக்கிறார். அது மிகவும் வேடிக்கையான நூல்; இனிமேலும் பலசிலாக்கியமான புஸ்தகங்களை இயற்றக்கூடியவரென்று இதனால் நன்குவிளங்குகிறது.

சென்ற முப்பதுவருஷங்களாக நமது திருவநந்தபுரம் துரைத்தனக்கலாசாலையினின்று ஆண்டுக்கு வெகு பேர்களாக அநேக வித்தியாபட்டதாரிகள் வெளிக்கிளம்பி இருந்தும், அவர்களில் தங்களுக்கு இங்கிலீஷ் கல்விப்பயிற்சியாற் கிடைத்த ஞானசம்பத்தை நாட்டுப்பாஷைகளுக்கு நன்மை பயக்கும்படி உபயோகித்த பேர்கள் மிகவும் சொற்பமே. நமது கலாசாலையின் அடுத்தவருஷோத்ஸவக் கொண்டாட்டம் வரும்போது சுதேசபாஷைகளில் சிறந்ததென்று தக்க பெரியோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய நூல் அல்லது நூல்கள் புதியனவாக வெளிவரும் சங்கதியை அக்கிராஸநாதிபர் தெரிவிப்பார் என்று நம்புகிறேன்.

13. நமது வித்தியாபட்டதாரிகள் சுதேசபாஷைகளில்வியாசங்கள் எழுதுவதையும் நாடாமல், இங்கிலீஷிலேயே எல்லாஎழுத்தையும் பேச்சையும் வைத்துக்கொள்ள விரும்புகிறார்களே இது நல்ல குறிபல்ல. இங்கிலிஷினிடத்தில் இவ்வளவு பட்சபாதமாக இருக்கிறார்களே, இதற்குக் காரணம், ஜீவனத்திற்கு ஒரு நல்ல வழி தேடவிரும்புகிறார்கள் என்பதே; வேறு ஒன்றும் இல்லை. ஆயினும், பின்வரப்போகிற தலைமுறையார் மனதில் தாம் நிலைத்த இடம்பெறவேணுமென்று முயல்பவர் மிகவும்சொற்பம்; அவ்வாறு பிற்காலத்தவர் உள்ளமாகிய பீடத்தில் நிலைத்த ஆஸநம் பெறுவது, ராஜ்யதந்திரிகள், சட்டநிருபகர், ஜயசீலர்கள் முதலியோரின் மாட்சிமையிலும் மேலானதாகும். ஸோலன் என்னும் கிரேக்கதர்ம சாஸ்திரகர்த்தாவால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களும் ஜகத்பிரசித்தமாக வெகு தேசங்களை ஜயித்த மகா

அலக்ஸாந்தரின் வெற்றிகளும் இப்போவெறும் பழங்கதைகளுக்
குள்ள சுவாரஸ்யம் மாத்திரம் உள்ளவைகளாக இருக்கின்றன;
ஆனால், பிளேட்டோ என்கிற தத்துவக்ஞானியின் ஞான நூல்களும்
ஹோமர் என்னும் இதிகாஸகவியின் செய்யுள்களும் எல்லாக்கா
லங்களிலும் எல்லாயுகங்களிலும் மனதை ஆனந்திக்கச்செய்து,
மேன்மையான தன்மையை அடையும்படி செய்து கொண்டிருக்
கின்றன.

14. அவ்விதமான அழியாத கீர்த்தியை அடைவதற்கு அ
நேகர் முயன்ற போதிலும், அது கிடைப்பது சிலருக்குமாத்திரம்
தான். அதை விலக்கிப்பேசும்போதும் மற்றெல்லா பாஷைகளை
யும் விட, நமது தாய் பாஷையானது நமதுபயபக்திக்கும் நன்றி
யறிவிற்கும், அன்பிற்கும் முதன்மையான பாத்தியமுடையது.
ஒரு தேசத்தார் தங்கள் நாட்டிற்குரியவைகளான பிரபந்தங்களை
அபிவிருத்தி செய்து கொள்வதினால் உண்டாகக்கூடிய நன்மை
கள் பல. அவைகள் யாவையெனில், "நாம் ஒரே நாட்டார்" என்
கிற ஐகமத்துவமான தேசாபிமானம், நாட்டார்மனம் எந்தெந்த
வழியில் சென்றால் சுகமாக வளருமோ அந்தப்படி அபிவிருத்தி
யடைதல், ஜீவனமுறைக்கு முக்கியமாகச் சம்பந்தப்பட்ட நித்தி
யப்படி விவகாரங்களில் ஜாஸ்தி கவனம், முதலியனவாம். இப்
படி நாட்டுக்கல்வியை அபிவிருத்திசெய்வதினால் பல விசேஷலா
பங்கள் கிடைக்கின்றனவென்பதற்கு அநேக சாட்சியங்களை சரி
த்திர பூர்வமாக நிரூபித்தல் எளிதுதான். சுதேச இலக்கிய இல
க்கண நூல்களையும் கல்வியையும் சுத்தமான நிலையிலிருக்கும்படி
காப்பாற்றுவதும், சாத்தியமானால், தாங்களே சுயபாஷையில் நூல்
களை எழுதுவதினால் அது செல்வமுள்ளதாகும்படி செய்வதும்,
கற்றறிந்த மனிதர்களின் கடன். இக்கடமையை மறவாது மனதிற்
கொண்டு, அதற்கேற்றபடி, முயற்சி செய் [illegible], சுதேசநடை
உடை பாவனைகளைக் [illegible] அல்லது
மாற்றிக்கொள்ளுகிறோமா, [illegible] ஒரு பக்கத்தில் மாத்திரம்
கேசங்களை வளர்க்கவேண்டுமா, அல்லது [illegible] முழுதிலும் ம
யிர் வளர்க்கவேண்டுமா, [illegible], அல்லது [illegible]டா
போடலாமா, ஒருவரை யொருவர் காணும்போது சலாம்செய்து

P31A
67600

கொள்ளுகிறதா, அல்லது நமஸ்காரம் சொல்லிக் கொள்ளுகிறதா என்கிற சில்லறை ஆசாரபாபத்துகளைப்பற்றி யோஜிக்கவேண்டியதே இல்லை. சுயபாஷை அபிவிருத்தி என்கிற கடமையை மறக்கிறவரையில், நாம் அனுஷ்டிக்கும் ஒவ்வொரு சிறு ஆசாரமாறுபாடும் நாடு உருவழிந்து போவதற்கும் வலிமை குன்றிப்போவதற்கும் மார்க்கமாகும். எந்த நாட்டார் தங்கள் பாஷை அழிந்து போகும்படி இடங்கொடுக்கிறார்களோ அவர்கள் தங்கள் சுயாதீனம் சுவதந்திரங்கள் முதலியவற்றில் எது அதிக சிலாக்கியமான பாகமோ அதை இழந்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டியது. தாங்களும் ஒரு நாட்டார்தான் என்கிற தேச ஜீவனிலையை இழக்க இணங்குகிறார்கள் என்று காட்டுகிறார்கள்.

ஜர்மனி தேசத்து மகாவித்வான்களில், ஷ்லீகல் என்கிறசகோதரர்கள் இரண்டு பேர்கள் உண்டு. அவர்கள் தங்கள் நாட்டுபாஷையாகிய ஜர்மன் பாஷையில் பகவத்கீதை என்கிற நமது ஞான நூலையும் இங்கிலீஷ் மகாகவியாகிய ஷேக்ஷ்பியரின் நாடகங்களையும் மொழிபெயர்த்தவர்கள்.

அவர்களில் ப்ரிடரிக்வான் ஷ்லீகல் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்.

“சுயாதீனமுள்ளவர்களாயும் பிற நாட்டார் உதவியைச் சாராதவர்களாயும் இருக்கிற ஒவ்வொரு நாட்டாரும் சுதேச இலக்கிய இலக்கணங்களடங்கிய ஒரு கல்வித்தொகுதியை அடையப் பாத்தியமுள்ளவர்கள். அவர்கள் தங்களது என்கிற ஒரு பாஷையுள்ளவர்களாயும், அதைத் தங்கள் மனோதர்மப்படி அபிவிருத்தி செய்யும் உரிமையுள்ளவர்களாயும் இருப்பது நியாயமே. அவ்வாறு நாட்டு பாஷைக்குரிய கல்வியால் அடையாவிடில், நாட்டாரின் புத்தி தீட்சணியம் சுயம்சகாயமுள்ளதாக ஒருபோதும் இருக்கமுடியாது; பரிசுத்தத்தின் தன்மையும் பழமையும் கோலமுமுடையதாக இருக்கும்படி செய்யும்; அவ்வித இனத்தவர்களினின்றும் விலக்கிக் கொள்ளமுடியாத நிலைமையுமாம். இப்படிச்சொல்வதினால் சுயபாஷையினிடத்தில் பட்சபாதமானதும் மட்டிற்

கு மிஞ்சியதுமான விசுவாசம் மேலிட்டு, அந்நியதேசத்து பாஷைகளை வாசிப்பதினால் கிடைக்கக்கூடிய பிரயோஜனங்களை அலெட்சியம் செய்ததாக எண்ணக்கூடாது. சாதாரணமாக மனப்பயிற்சி யடைவதற்கு, அவரவர்கள் தொழின் முயற்சிகளின் தேவைக்குத் தக்கபடிக்கு, பூர்வகாலத்து ஸம்ஸ்கிருத பாஷைகளின் ஆராய்ச்சியும் அநேக நவீன பாஷைகளைப் படிப்பதும் பலருக்கு விரும்பக்கூடிய வித்தியா சம்பாதனமாகவும் மிகவும் ஏர்வையுள்ளதாகவுமே இருக்கலாம். அவரவர்களின் வெளிநிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றபடி தகுந்த பாஷைகளைப்பொறுக்கி யெடுத்துக்கொண்டு அவைகளை ஆராய்ச்சி செய்வது உசிதமாகவும் சௌகரியமாகவும் இருக்கும். இராச்சியபரிபாலன காரியங்களிலும், உயர்ந்த அந்தஸ்தைச் சேர்ந்த ஜனங்கள் கூடிப்பழகும் சபை முதலிய காரியங்களிலும், அந்நிய பாஷையைப் பிரயோகித்தால், அது எந்த பாஷையைக்கீழ்ப்படுத்தி அமுக்கத்தலைப்படுகிறதோ, அதற்கு மிக்கதீங்கிழைக்கும்படி நேரிடும். இப்படி சுயபாஷைக்குத் தாழ்வை யுண்டாக்கும் அநுஷ்டானம் ஒருதரம் ஏற்பட்டுவிட்டால் தனிமனிதர்கள் தங்கள் இஷ்டம் எப்படி இருந்தபோதிலும் சரி, ஊர் வழக்கத்தை அநுஷ்டித்துத் தாங்களும் அந்நியபாஷையை நித்தியப்படி வழக்கத்திலும் பிரயோகிக்கும்படி நேர்ந்து விடும்; அதை நீக்குவதுசாத்தியமன்று; இவ்வாறு ஏற்படும் இரண்டு எதிர்க்கட்சிக்காரர்களுக்குள்ளும், நடுக்கண்ட நியாயமாகப்பேசி மத்தியஸ்தம்செய்து ஒழுங்குப்படுத்துவது செல்வமும் செல்வாக்குமுள்ள உயர் வகுப்பினர் செய்யவேண்டிய பெருங்கடமை. அவர்கள்செய்யவேண்டிய விதாயகம் யாதெனில், அந்நியபாஷை எந்த மட்டிற்கு அத்தியாவசியமோ அந்தமட்டோடு அதன் செலாவணியை நிறுத்திக் கொள்ளும்படி செய்தலும், தங்கள் நாட்டிற்கு ஜனங்கள் செய்யவேண்டிய மிகவும் பரிசுத்தமான கடமையாகிய சுயபாஷாரட்சணம் என்னும் கடமையைத் தங்கள் ஜனங்கள் மறவாது பார்த்துக் கொள்வதும் தான். ஒரு நாட்டுப் பாஷைகளுக்கு போஷகர்களாக இருந்து ஆதரிக்கும் கடமை பெரிய மனிஷர்களின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருப்பதாக ஒரு விதத்தில் நாம் வைத்துக் கொள்ளலாம்.

அவர்கள் இங்ஙனம் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட அதிகாரத்தை துர்விநியோகப்படுத்தாமல் இருக்கட்டும். தன் ஜன்மபூமியின் பாஷை சுத்தமாக இருக்கும்படிக்கும் அதற்குரிய சுதந்திரங்களை ஒருவரும் அதிக்கிரமித்துக் கொள்ளாமலிருக்கும்படிக்கும் காப்பாற்றுவது கல்விப் பயிற்சியை யடைந்த ஒவ்வொரு மனிதனும் மிகவும் சிரத்தையோடு செய்யவேண்டிய மேலான கடமை. இக்கடமையைப்பற்றிச் சொல்லாற் பிறர்க்கு எடுத்துரைப்பதோடு நில்லாமல், தன் அநுஷ்டானத்தாலும் செய்து காட்டக் கடவன். தன் நாட்டின் சரிதத்தை நன்றாக ஆராய்ந்து அறிந்து கொள்வதோடு, தன் பாஷையும் எவ்வாறு உற்பத்தியாயிற்று, எவ்வாறு செல்வாக்குப் பெற்றது, எங்ஙனம் அபிவிருத்தி யடைந்தது என்பதையும் ஐயந்திரிபறக் கற்க முயலல் அத்தியாவசியம். இந்தத் தீர்மானத்தோடு முயலுகிற வித்தியார்த்திக்கு அந்நிய பாஷைகளையும் சௌகரியப்பட்ட மட்டில் கற்றுக்கொள்வதினால் வேலை சுளுவாகுமே யொழிய வேறல்ல. ஏனெனில் இவ்வாறு பாஷைகளைக்கற்கும் முயற்சி புத்தியைத் தீக்ஷணியப்படுத்திச் சொல்வன்மையை உண்டுபண்ணத் தக்கது. ஆயினும் அதிகப்படியாய்க் கற்கும் ஒவ்வொரு பாஷையையும் அநுஷ்டானத்தில் அவசியமான மட்டிற்கே உபயோகப்படுத்தி அதற்குமேல் அதின்பிரயோகம் அதிக்கிரமிக்காமல் கண்டிப்பாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டியது. தங்கள் நாட்டின்மொழி ஆரோக்கியமாய்ச்செழித்தோங்கும்படி ஆதரித்துத்தன்னாலான விதங்களிலெல்லாம் அதற்கு வழிதேடுவது பெரியமனிதர்கள் தங்கள் தலையில் நீக்கவொண்ணாத விதமாக வந்து சுமந்த பாரமாகக்கருதி முயலல் கடமை. தங்கள் நாட்டின் வாழ்வில் பெரிய மனிதருக்கு மற்றோரைவிட விசேஷமான சிரத்தை இருக்கவேண்டியது. எவ்வளவுக்கெவ்வளவு அவர்களுக்குச் செல்வமும் செல்வாக்கும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் உத்திரவாதமும் ஜாஸ்தியாக இருக்கிறது. ஒரு நாட்டார் பாஷை க்ஷீணதிசையை அடைய ஆரம்பித்தாலும் சரி, அல்லது சீர்குலைந்துவிட்டாலும் சரி அந்த மொழிக்குரிய நாட்டாரும் 'ஆலைப்பிடித்து அரசைப்பிடித்துப் பிள்ளையாரையும் கூடப்பிடித்தது' என்றமா

திரி நாகரிகமற்றமிலேச்சத்தன்மையுள்ளவர்களாக மாறிவிடும்படி நேர்ந்துபோம். தங்கள் சுயபாஷையின் வன்மையாகிய செல்வம் கொள்ளைபோய்க்கொண்டிருக்கும்போது ரோஷமாவது முயற்சியாவது இல்லாமல் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கும் அறிவீனம் மேற்கொண்ட நாட்டார் பிறர் உதவியை நாடாது தன்முயற்சியுள்ள ஜனங்களுக்குரியமதிப்பையும் மரியாதையையும் இழந்து போகிறார்கள்; நாகரிகம்பெற்ற உலகிலுள்ள நாட்டார்களுக்கிடையே தங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அந்தஸ்தினின்று தாழ்த்தப்படுகிறார்கள்.

A. கோவிந்தபிள்ளை, *

(மொழிபெயர்த்தோன்: உ. நா. அ.)

---

# ஆஸ்தீக மதவாராய்ச்சி

தொன்று தொட்டே இப்பரதநாட்டில் தத்துவ ஆராய்ச்சியுண்டாயிருந்ததென்றுந் தன்னிமித்தம் பற்பல காலங்களில் பற்பல சமயங்கள் தம்முண் முரண்டு உண்மையை வெளிப்படுத்தத்தக்க முயற்சி யுண்டாயிருந்ததென்றும் நமது தேசச்சரித்திரங்கூறும். அயல் நாட்டினு மதிகமாக இந்நாட்டில் பூர்வகாலமுதல் வேதாகம புராண விதிகாசங்கள் ஆக்கப்பெற்று விளங்கிவருவது மிதற்கொரு சான்றாம். சுருதி, யுக்தி அநுபவமாகிய இவற்றுள் இவ்வாராய்ச்சி ஏற்றவும் சுருதிப் பிரமாணத்தைத் தழுவியும் மற்ற விரண்டு பிரமாணங்களான் நிர்ணயிக்கப்படாமலுமிருந்தது யாது காரணம் பற்றியோ அறிகிலேம். ஆங்கிலப்பயிற்சி மிகுந்து வருமிந்நாட்களில் சுருதிப் பிரமாணங்களில் நம்பிக்கை குன்றவும் நம்பிக்கைக்கேற்றவைகள் மற்ற விரண்டு பிரமாணங்களால் தூக்கப்பட்டு வருவது மியல்பே. நாஸ்திக மலைச்சிகரத்திலேறித்தவழ்ந்து தட்டுண்டு தடுமாறி அஞ்ஞான சாகரத்தில் வீ

* இந்த உபந்நியாசம் திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டு நியாயாதிபதி மகா-ா-ா-ஸ்ரீ A. கோவிந்தபிள்ளை அவர்கள் அந்த ராஜ்ய கலாசாலையின் வருஷ மஹோத்சவகாலத்தில் எழுதிப் படித்தது. "மெட்றாஸ் ரிவ்யூ" என்ற வர்த்தனியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

ழ்ந்து மூழ்கி ஆனந்திக்கும் நமது நண்பர் ஆங்கிலப்பயின்றமாண
வரில் சிலரால் அப்பயிற்சியில்லாத எனையோரும் மேனாட்டாரது
வெளிமயக்குநாகரீகமுங்கண்டுமயங்கித் தம் பூர்வ புராணாதிகளை
வேதம்போல் மறைபொருளாக்கி இன்புற்று வாழ்கின்றனர்.
இத்தகையினர்க்குக் கடவுளதுண்மையை யுக்தி யனுபவப்பிரமா
ணங்களா லேற்படுத்தி அவனது குணாதிசயங்களை இக்காணும்
பிரபஞ்சத்தாற்சாட்சிப்படுத்துவது பயன்றராமலிராது என்பது
திண்ணம்.

இக்காணப்படு முலகால் காணப்படாத கடவுட்குண்மைகூற
வேண்டும். நாங்காணு முலகு எப்பொழுதும் சலனத்தை யியல்
பாக வுடைத்து; இவ்வுலகு மாத்திரமல்ல. இவ்வண்டத்தொ
குதியு மித்திறத்ததே. இன்று காலத் துதித்தமலர் சூரியோட்
ணங்கொண்டு வெதும்பி விழுந்து மறுநாள் மண்ணாய் மாறிவிடு
கிறது. நமது தோட்டத்தில் வளர்த்தும் பூஞ்செடி ஒருநாளிரவி
ற்றனே எத்தனை வளர்ச்சியைக்காண்பிக்கிறது. இவ்வுலகின்கண்
ஒருநாளில் எத்தனை பேர் இறந்தும் பிறந்து மிருத்தல் வேண்டும்.
இன்று கண்ட மனிதனொருவனைத் திரும்ப மறுநாள் நமக்குக்கா
ணக்கிடைத்தால் அவனிற்றான் எத்தனை மாற்றும் சடத்தில் எத்
தனை வேற்றுமை மனதில் எத்தனை திரிபு. எனவே, இவ்வண்டபி
ண்ட சராசரங்கள் யாவுஞ் சலனத்தையே இயல்பாக வுடைத்த
தாய் வேற்றுமைப்பட்டு வருகின்றன. குயவன் கடத்தை வனைந்
தான். மனிதன் வீட்டைக்கட்டினான். மண் முதலிய துணைக்கார
ணங்கொண்டு மனிதனது செய்தற்றொழிலால் ஆக்கப்பட்டனவ
ல்லது வேறுண்டோ? வான் பொழியு மழைபோலும் கடல்நீர்
சூரியோட்ணத்தால் ஆவியாகி வானத்தில் சஞ்சரிக்கக் குளிர்
காற்றோடு சம்பந்தப்பட்டு மாரியாவதை நம்மில் அறியாதார் யா
ர்? இங்ஙனம் உலகிற் காணுந்தோற்றம் யாவும் தன்னிலுண்டா
ன மாற்றமல்லாமல் நூதனச்சிருட்டி யொன்றுமல்ல. மந்திரத்தா
ல் மாங்கனி வராததும் இல்லதிலிருந்து உள்ளது வராததும் பிரத்
தியட்சப்பட்டது மேற்கோள் கொண்டறிக.

அவன்வளது வென்னு முப்பகுதிப் பட்ட விப்பரபஞ்சம்
தோற்றம் நிலை இறுதியென முத்தொழிற்பட்டு மேற்கூறியவாறு

வேற்றுமைப்பட்டு நிற்கும். அவற்றில் முன்னவையிரண்டும் உணரச்சியுள்ள சேதனப்பிரபஞ்சமும் ஏனையது உணர்ச்சியற்றசடப் பொருளாகிய காரியப் பிரபஞ்சமுமாம். சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச்சுட்டுணர்வுள்ளதாய் நிற்றலானும், காரியப்பிரபஞ்சம் அசேதனமாய் நிற்றலானும் இவற்றைத் தொழிற்படுத்த விவற்றின் வேறாய வொரு முதற்கடவுளுண்டென்பது நிச்சயம். எவ்வாறு மண்ணைக்கடமாக்கக் குயவன் வேண்டுவதாவசியமோ, நீரையுந் தீயையும் பந்தப்படுத்தி நீராவியாக்க மனிதனது சக்தி ஆவசியப்பட்டதோ, அவ்வாறு முதற் தொழிற் பட்டதாய் இப்பிரபஞ்சத்தையுந் தொழிற்படுத்தவொரு முதற் கடவுள் வேண்டுமென்பது பிரத்தியட்சங் கண்டுணர்க. நாஞ்சீவிக்கு மிம்மண்ணுக்கொப்ப, வானிற்காணும் சூரிய சந்திராதி நட்சத்திரங்களும் தனித்தனி யுலகென்றும், அவையிற் சில நம்முலகைவிட அதி விஸ்தீரணமுள்ளனவென்றும் வானசாஸ்திரிகளால் கணிக்கப்பெற்றுள்ளன. அசைவையே தற்சுபாவமாகவுள்ள இவ்வண்டத்தொகுதிகள் தம்முண் முரண்படாமல் அனேக கல்பகாலம் தந்தொழில் நடத்திவருவது அதிசயிக்கத்தக்கதல்லவோ? அவைகள் குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டு சஞ்சரித்தது நிமித்தம் வானசாஸ்திரிகள் அவைகளினிலையைக்கண்டறியவும் கிரகணதிகளை நிச்சயிக்கவும் சக்தர்களாயினர். இவ்வமைப்பு யாராலாக்கப்பெற்றது? மனித சஞ்சாரமில்லாத வொருவனத்தில் ஒரு கைக்கெடிகாரங்காணில் நமது யூகமென்னும்? சாமான்ய புத்தியுள்ள மனிதனாலாக்கப் பெற்றுக் கொண்டுவந்திடப்பட்டிருக்கவேண்டு மென்றல்லவோ? இவ்வண்டத் தொகுதியிற் காணுமமைப்பும் அளவிலாற்றலும் முற்றறிவுமுள்ள ஒரு முதல்வனது கட்டளையாயிருத்தல்வேண்டும்.

“அகர முதலவெழுத் தெல்லாமாதிபகவன் முதற்றேயுலகு”

எனவும்,

“அவனன்றியோ ரணுவுமசையா தெனும் பெரிய
வாய்தர் மொழியொன்று கண்டால்”

எனவும், நமதருமைத்தமிழ்ப் புலவர் கூறுமுகத்தால் கண்டுணர்க.

மனிதனது அற்புத சரீரத்தையும் இவ்வமைப்பிற் குதாரணிக்கலாம். 500 தசைகளாற் பொதியப்பெற்ற 200 என்புகள் உள்ளடங்கிய இவ்வதிசயவுடலில், மதிப்பிற் கடங்காத இரக்தப்பைகளும், சுவாசகாசயத்தில் 2000 அடி நீளமுள்ள சிறிய ஈரற்பைகளும், தனதொருச்சாண் வயிற்றில் 30 அடி நீளமுள்ள குடல்களும், அமைந்துள்ளன வென்னவே அதன் மகிமையுமென்னும்? எண்சா ணுடம்புக்குச் சிரசே பிரதானம். அதிற் காணுமூளை தன்னில் 120 கோடி அணுத்திரளுண்டாம். ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்குச்செவி இவைகளில் அவ்வவற்றின் றொழில் நடாத்தும் இயந்திரக் கிடப்பு அதிசயிக்கத்தக்கதே! இங்ஙனம் பலவேற்றுமைப்பட்ட அங்கங்களொருங்கு சேர்ந்து வெகு வமைதியோடு தந்தொழில் புரிந்து வருகின்றன. இவ்வமைப்பெல்லாம் இயற்கையே ஏற்பட்டனவோ? பொருந்தாது: அமைப்பு மியற்கையுந் தம்மில் மாறுபாடுள்ளது பற்றி. எனவே, இவை யெல்லாம் ஒரு முழுமுதற் கடவுளதாணைக்குட்பட்டதென்றே தேறல் தகுதி. இனி விரிக்கிற் பெருகும். இது நிற்க.

கடவுட் குண்மையை யுக்திப்பிரமாணத் தாலொருவாறு சாட்சிப்படுத்தினோம். இனி யதற்கு அனுபவப்பிரமாணம் வருமாறு. இப்பிரபஞ்சத்திற்கெல்லா முதல்வனாகிய பதியை நாங்காணக்கிடைக்குமோ? சிற்றறிவும் மும்மல பந்தமுமுள்ள நாம் நிருமலனும்பேரறிவனுமாகியமுதல்வனைக்காண்பதெப்படி? ஐயையோ! என்னென்றெடுத்துரைப்பேன்? நானேதென்றெடுத்துரைப்பேன்?

"பெற்ற வட்கே தெரியுமந்தவருத்தம் பிள்ளை
பெறுப் பேதை யறிவாளோ பேரானந்த
முற்றவர்க்கே கண்ணீர் கம்பலை யுண்டாகு
முறுதவரே தன்னெஞ்சமுடையராவார்.'
என்றார் தாயுமானவரும்.

ஊனக்கண் காணப் பதியை நாம் ஞானக்கண் கொண்டு காணக்கிடைக்குமே. பிறப்பிற்கஞ்சி அப்பிறப்பினை நீத்துச் சிவபதமடைய வேண்டிப் பல பிறப்புக்களில் தவஞ்செய்ய வத்தவப்

பேற்றின் பயனுகப் பக்குவமெய்து மிஞானவெழுச்சியுண்டாகும். இதற்குத் துணைக்காரணமு மவனதருளேயாம். அவனருள் கொண்டு காண்பதல்லால் வேறுவழி யொன்றுங் கண்டிலேமென மொழிந்தனர் அறிவின் மிக்கோர். "அவனருளாலே அவன்றாள் வணங்கவும்" இதிற் புதுமையென்ன? உயிரினின்று பிரிந்தவுடல் தன்னையோ தன்னைத் தொழிற் படுத்திய நாதனையோ அறிவ துண்டோ? பின், உயிரொடு கூடுங்கால், தன்னையுந் தன்னுதனையு மறியவேற்படுகின்றது. அவ்வண்ணமே, உயிருக்குயிராகிய பதி யினருளினுல், மெய்போன்ற பசு தன்னையுந் தன்னுதனையுமறிய வேற்படும்; திரை கடலோடியல்லாது தீவின் கட்பட்டவொரு சீமையைக்காண்பதெப்படி? அங்ஙனம் போக மடித்தவொருவன் ஆங்கிலேயத்தீவின் கண்ணதாய லண்டன்பட்டணத்தைக்காணப் பெருது, அதற்குண்மையை மறுத்தல் நீதியோ? பிறவிக்குருட னெருவன் பலவித விசித்திர வேலை செய்யப்பெற்ற வரண்மனை யைக்கண்டு ஆனந்திப்பதெப்படி? அவனது திருவருட் புணை கொண்டே அவனை யறிந்து இப்பவக்கடல் கடந்து முத்திக் கரை சேரல்வேண்டும்.

தாயுமானசுவாமிகள் அருளிச்செய்த ஆனந்தக்களிப்பும், சைவசமயக்குரவர் நால்வரும் திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வே தமு (தேவாரமுந் திருவாசகமும்) எம்மனோரது அனுபவத்தைக் குறித்ததன்றே? அவையிற் சிலவருமாறு:

"ஆதியனதியுமாகி—எனக்
கானந்த மாயறிவாய் நின்றிலங்குஞ்
சோதி மவுனியாய்த்தோன்றி—அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னுண்டி தோழி, சங்கர"
தாயுமானவர்.

"இரந்திரந்துருக வென்மனத்துள்ளே
வெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய
திருப்பெருந்துறை யுறைசிவனே
நிரந்த வாகாய நீர் நிலத் தீகா

லாயவை யல்லியா யாங்கே
கரந்த தோருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்டின்றே"

திருவாசகம் கோயிற்றிருப்பதிகப்.

"தந்தது முன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார் கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தப் பெற்றே
னியாது பெற்ற தொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
யெந்தையே யீசா யுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர் கைம்மாறே.

ஷை

"அறவையேன் மனமே, கோயிலாக் கொண்டு ஆண்டு
அளவிலா ஆனந்தமருளி"

ஷை

பி. கோமதிநாயகம்பிள்ளை, B A

# இந்தியாவில் உபயோகித்துவரும் தறிகள்.

## (201-ம் பக்கத்தொடர்ச்சி.)

### (9) அத்தொழிலைப் பரவச்செய்யும் விதம்.

மேலே சொல்லியவிதம் நாட்டுத்தறியில் நாடா ஒரு நிமிஷத்திற்கு எத்தனை தடவை ஓடுகின்றதோ, அதைக்காட்டிலும் நாலு மடங்கு வேகமாகச்செல்லக்கூடிய ஒரு நெசவு யந்திரம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வியந்திரத்தில் சரிவர வேலை நடப்பதற்கு அத்தொழிலை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும். அவைகள் (a) பாவு போடுதல், (b) பாவு மரத்தில் பாவைச் சுற்றுதல். (c) கஞ்சிப்போட்டுச் சிக்கெடுத்தல். (d) அச்சில்பாவு நூல்களைக்கோர்த்து வாங்கி நெய்தல்.

(a) அநேகம் தறிகளமைந்த ஊர்களுக்கு மத்தியில் அவைகள் பாவுநூல்களுக்காக வேலையின்றி சும்மா கிடக்காவண்ணம் ஒரு பாவு இழைக்கும் யந்திரம் அவசியம் வேண்டும். அப்பாவு யந்திரம் உடையவன் தானே நூல் வாங்கி பாவு இழைத்துத்தறிகளில் வேலை செய்பவர்களுக்குக் காலதாமதமின்றி அம்போதைக்கப்போது விற்றுவந்தாலும் வரலாம்; அல்லது தறிகளில் வேலை செய்து வருகிறவர்கள் கொடுக்கும் நூலை வாங்கி பாவு இழைத்துக்கொடுத்து அதற்கடங்கிய கூலியை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டாலும் கொள்ளலாம்.

(b) மிகவும் நீளமான பாவை பாவு மரத்தில் கையினுற் சுற்றுவது மிகவும் சிரமம். அப்படிச்சுற்றியபோதிலும் பாவு நூல்கள் சமமாக அப்பாவு மரத்தில் சுற்றப்படுவதில்லை. ஆதலால் பாவை அம்மரங்களில் சுற்றுவதற்கு பாவு சுற்றும் கை யந்திரங்களைக்கொண்டு சுற்றவேண்டும். இத்தொழிலைப் பாவு தயார் செய்யும் தொழிலோடே சேர்த்துச்செய்தாலும் செய்யலாம், அல்லது பிரத்தியேகமாகச் செய்தாலும் செய்யலாம்.

(c) கஞ்சிபோடுவதையும் பிரத்தியேகமாகச் செய்தாலும் செய்யலாம்; அல்லது பாவோ நெய்தோடும் பாவு மரத்தில் பாவு சுற்றுவதோடும் சேர்த்துச்செய்தாலும் செய்யலாம். அநேகம் தறிகள் உள்ள இடத்தில் பிந்திச்சொன்ன விதமாய்ச்செய்வது மிகவும் நலமாக இருக்கும். ஆனால் அவ்விதத்தொழில் செய்ய ஒரு நீராவி யந்திரம் அமைந்த ஒரு தொழிற் சாலையாயின் அதிலும் மிகநலம்.

(d) அச்சிலுள்ள கண்களின் வழியாகப் பாவு நூல்களைச் சரிவரக்கோர்த்து வாங்கி வடிகள் சரியாக ஏறவும் இறங்கவும் அமைத்துவிட்டவுடன் வேலைக்காரன் நெய்ய ஆரம்பிப்பான்.

இப்போது சர்வகலாசாலை சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தால் அரைப்படிப்புள்ளவர்களும், மேற்படிப்புப்படிக்க ஐவேஜிபற்றவர்களும் கிராமாந்தரங்களில் இவ்விதத்தொழிற் சாலைகளையமைத்து அவைகள் சரிவர வேலைசெய்யுமாறு செய்து தல் மிகவும் மேன்மையைத்தரும். இவ்விதச்சிறிய தொழிலை மேற்கொண்டு அதிகலாபத்தைக் கருதாமல் சொற்ப லாபத்திற்கு நெய்பவர்களிருக்கும் இடங்களிலிருந்து 'அவர்களுக்கு உதவி புரிந்துவந்தால் பவர்த்தறியால் நெய்யக்கூடியதெவ்வளவோ

அவ்வளவிற்குப் பாதிக்குக்குறையாமல் கைத்தறியால் நெய்ய லாம். இப்படி இவ்விந்துதேசத்திலுள்ள வேலைக்காரர்கள் நெய்துவருவார்களாயின் பவர்த்தறியால் கைத்தறி தோல்வியடையப் படமாட்டாதென்பது திண்ணம். நாளடைவில் இச்சிறிய தொழிற்சாலைகளும், பவர்த்தறித்தொழிற் சாலைகளாய்விடும். நான் இதுவரையில் சொல்லி வந்ததில் நூல் நூர்ப்பதைப்பற்றிப் பேசவேயில்லை. நம் நாட்டிற்கு வேண்டிய நூல் நமது தேசத்திலே இழைப்பதற்கு எவ்வளவு இராட்டிணங்கள் ஏற்படவேண்டுமோ அவ்வளவும் அமைகிறவரையில், பிறதேசத்தினின்று இத்தேசத்தில் இறக்குமதியாகும் வஸ்திரத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவிற்குக் குறையாமல் வஸ்திரங்களுக்குப் பதிலாக நூல் இறக்குமதியாகும் வண்ணம் நாம் தொழில் செய்து வரவேண்டும். இது கனவல்ல, நனவே நம்மவர்கள் சற்றுத் தூக்கத்தினின்றும் விழிக்கவேண்டும் இப்போது சற்றுவிழித்திருக்கின்றார்கள். சோம்பல்நீக்கிச்சற்றுச்சுறுசுறுப்பாய் முயலல்வேண்டும் முயன்றால் 'முயற்சி திருவினையாக்கும்' என்றபடி, எல்லாம் கைகூடிவரும் என்பது நிச்சயம் அதுவும் சொற்பகாலத்திற்குள் வரும். 'மெய் வருத்தம் பாரார்பசிநோக்கார் கண்டுஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொளார் - செவ்வி, அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார், கருமமே கண்ணாயினர்.' என்றபடி எல்லாரும் ஒரு நோக்காக இருந்து தங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவார்களாக. மேற்காட்டிய விஷயம் நிறைவேறுமாறு நான்கு ஏதுக்கள் தற்காலத்தில் வேலை செய்து வருகின்றன. அவைகளாவன:—

1. இத்தேசத்தில் எல்லா இடங்களிலும் நமது தறியில் சில வேறுபாடுகள் செய்து நன்றாயும், அதிகமாயும், வேகமாயும் நெய்ய புதிய சாதனங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற முயற்சி.

2. சர்வகலாசாலையார் ஏற்படுத்திய சட்டம்.

3. கைத்தொழில்களை விருத்திபண்ணவேண்டுமென்று படித்தவர்கள் மேற்கொண்டுஊக்கத்துடன் பலரும் அறியும்பொருட்டு ஏற்படுத்திய தொழிற் சபைகளும், கைத்தொழிற்காட்சிகளும்.

4. கடைசியானதும் எல்லாவற்றிற்கும் மேன்மையானதும் எது எனின், நம்நாட்டாரிடத்தில் குடிகொண்டுவருகிற சுதேசியம் என்ற மன ஊக்கமேயாம். (இன்னும்வரும்)

K இராமானுஜ ஐயங்கார்.

67600

# தமிழகம்.

---

இது தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதன் வருஷ சந்தா இந்தியா, பர்மாவுக்கு ரூ 1—8—0 சிங்கப்பூர், பினங்கு முதலான விடங்களுக்கு ரூ 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் மானேஜர் அவர்களிடத்தில் சந்தாவை முன்டணமாக நேரே செலுத்தியாகிலும், மணியார்டர் மூலமாய் அனுப்பியாகிலும் பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம். பல நண்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கி மாணுக்கர்களுக்குச் சந்தாவைக்குறைத்திருக்கிறோம். ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணுக்கர்கள் தமது தலைமை உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்து கொள்ளுவார்களானல் அவர்களுக்குப் பத்திரிகை ரூ 1—0—0-க்குக் கொடுக்கப்படும். பத்திரிகைக்கு விஷயம் எழுத விரும்பிறவர்கள் தங்கள் வியாசங்களை பத்திராசிரியர் அவர்களுக்கு அனுப்பக் கோருகிறோம்.

விளம்பரம் போடுவதற்கு வரியொன்றுக்கு அணு 1. நீடிய காலம் பிரசுரித்து வரவேண்டியவைகளுக்குப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும்.

மற்ற எல்லா விவரங்களும் மானேஜர்களுக்கு தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

G. S. மணியா & Co.,
மானேஜர்கள், தமிழகம்,
தஞ்சை.

## புத்தக விளம்பரம்

---

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தில் விலைக்கு அகப்படும். வேண்டியவர்கள் ஷை சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| 1. | கத்தியசிந்தாமணி, (ஸமஸ்கிருதவசனம்) காவியம் (வாதீப சிம்மசூரியினல் செய்யப்பட்டது) | 2—0—0 |
| 2. | க்ஷத்திரசூடாமணி, (ஸமஸ்கிருதகாவியம்) காலிகோகட்டடம். | 0-15—0 |
| 3. | ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மகாகவி) | 1—0—0 |
| 4. | தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம் (தமிழ்) | 0—2—6 |
| 5. | ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பர் 1. | 0—6—0 |
| 6. | சுவாமிநாதவிஜயம். | 0—1—0 |
| 7. | தொல்காப்பியப்பாயிர விருத்தி. | 2—(—0 |
| 8. | மாலைமாற்று மாலை. | 0—4—0 |
| 9. | சிவக்ஷேத்திர யாத்திராநுகூலம் | 0—4—0 |
| 10. | சுதேச வைத்திய ரத்தினம் | 0-12—0 |
| 11. | விகடவாதம் (ஒரு தமிழ்நாடகம்) | 1—0—0 |

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்,
13—6—07.

தி. இராஜமையங்கார்,
காரியதரிசி.